# தீத்து
# ஒரு அறிமுகம்

ஜேக் M. ஸ்கோர்ன் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

*தேவனால் ஒரு அண்டத்தையும்,*
*பூமி உருண்டையானது தன்னிடத்திலே சுழலுவதையும்,*
*அதன் பாதையின் இயக்கத்தையும், அதன் ஓட்டத்தின் கட்டுப்பாட்டையும்,*
*வீரார்ந்த சட்டத்துடனும் கிருபையுடனும் திட்டமிட முடியுமென்றால் ...*
*நிச்சயமாகவே அவர் மனிதன் தனிமையாய் இராதபடி*
*ஒரு வாழ்க்கைப் பாதையைத் திட்டமிட்டார் என்றேயாகிறது!*
*ஆம், அவர் அறியப்பாடாத ஏராளமானவற்றினூடாக*
*வாழ்வின் ஓட்டத்தை இயக்கி நடத்துகின்றார்.*[1]

தேவனுடைய அருளிரக்கம் பற்றிய கவிதை நடையிலான இவ்வுருவாக்கம், தீத்துவுக்குப் பவுலின் நிருபத்தைப் பற்றி ஒருவர் படிக்கத் தொடங்குகையில் ஏற்புடைய சிந்தனை மாதிரியாக உள்ளது.

## நோக்கம்

இந்த நிருபமானது தேவனுடைய அருளிரக்கம் செயல்படுவதன் வல்லமையுள்ள நடைமுறைச் செயல்விளக்கம் ஒன்றை நமக்கு முன் வைக்கின்றது. தீத்துவுக்குப் பவுல் நியமித்த பணிப் பொறுப்பானது, ஒரு *சுவிசேஷ ஊழியர் உள்ளூர் சபைக்குழுமங்களைக் கட்டியெழுப்ப எவ்வாறு ஊழியம் செய்ய வேண்டும்* என்பதைத் துல்லியமாய்ச் சுட்டிக்காட்டுகின்றது. "இந்தக் காரணத்திற்காகவே" (தீத்து 1:5) பவுல் தீத்துவை கிரேத்தா தீவில் விட்டு வந்தார்.

இந்த நிருபத்தின் ஒவ்வொரு முகப்பும் பக்குவமடையும் உறுப்பினர்களை நோக்கி இயக்குவிக்கப்படுகின்றது (1:5-9). இது பல்வேறு வகையினரையும் குழுக்களையும் பற்றி எடுத்துரைக்கிறது (2:1-10), *இல்லம் சார்ந்த* (1:10, 11; 2:5, 6), *சமூக* (1:12, 15, 16) மற்றும் *சபை* (3:9-11) சூழ்நிலைகளில் கலகம் விளைவிப்பவர்களைக் கையாள்வது எப்படி என்பதற்கு வழிகாட்டுதல்களை அளிக்கின்றது. பல்வேறுபட்ட வகையினரும் குழுக்களும் எந்தக் காலத்திலும் சபைக்குழுமத்தின் அங்கமாய் இருப்பார்கள். இவ்வகையில் இந்த நிருபமானது கிறிஸ்து இயேசுவுக்குள் அழைக்கப்பட்ட மேன்மையான நியமத்திற்கு உயர்ந்து நிற்கும்படி யாவருக்கும் அறைகூவல்

விடுக்கிறது (2:11-14; 3:3-6), இது நமக்கு "நித்திய ஜீவனின் நம்பிக்கையை" அளிக்கிறது (1:2; 3:7).

தீத்து ஒரு காரணத்திற்காக - சரீரத்தைக் கட்டியெழுப்புதல் என்பதற்காக - கிரேத்தா தீவிலே விடப்பட்டிருந்தார். இந்த நாட்களில் சுவிசேஷ ஊழியர்கள் உள்ளூர் சபைக்குழுமங்களின் மத்தியில் தேவைகளைச் சந்திக்க உதவும் அதிக வலிவான கருவியைக் கண்டறிய வீணான வகையில் தேடிக் கொண்டுள்ளனர்.

பவுல் எழுதிய 1 மற்றும் 2 தீமோத்தேயு மற்றும் தீத்து என்ற இம்மூன்று நிருபங்களும் பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து மேய்ப்புப் பணி நிருபங்கள் என்று அறியப்பட்டுள்ளன. கி.பி. 1703ல் D. N. Berdot என்பவர் தீத்துவுக்கு எழுதிய நிருபத்தை "மேய்ப்புப் பணி நிருபம்" என்று விவரித்தார், ஆனால் மைக்கேல் மோசஸ் கவனித்துள்ளபடி, "உண்மை நிலையில், இம்மூன்று நிருபங்கள் எதிலும் 'pastor' என்ற சொற்றொடரோ அல்லது அதன் இணைச் சொல்லான 'மேய்ப்பர்' என்பதோ இல்லை ... இந்த நிருபங்கள் உண்மையில் மேய்ப்புப் பணி இறையியலுக்கான ஒரு கை நூலாய் இருப்பதில்லை. இந்தப் புத்தகங்களின் ஒரு சிறு பகுதியே பிரசங்கப் போதனை என்று கூறப்படக்கூடிய விஷயங்களைக் கொண்டுள்ளன (1 தீமோ. 3:1-13; 5:3-22; தீத்து 1:5-9)."[2]

## இடமும் மக்களும்

கிரேத்தாத் தீவின் மக்களுடைய இயல்பு நன்கு அறியப்பட்டிருந்தது. கிரேத்தாத் தீவார் ஒரு (தீய) மதிப்பைக் கொண்டிருந்தனர். வில்லியம் பார்க்ளே பின்வருமாறு எடுத்துரைத்தார்:

> பழங்கால உலகில் கிரேத்தாத் தீவாரைக் காட்டிலும் அதிகம் மோசமான பெயரெடுத்தவர்கள் எவரும் இருந்ததில்லை. பழங்கால உலகினர் மிகவும் தீமையான மூன்று C'க்கள் பற்றிப் பேசினர் - Cretans (கிரேத்தர்), Cilicians (சிலீசியர்கள்), மற்றும் Cappadocians (கப்பதோக்கியர்கள்). கிரேத்தர்கள் குடிவெறி, துடுக்குத்தனம், நம்பத்தகாத தன்மை, பொய் மற்றும் பெருந் தீனிக்கார மக்கள் என்று பெயர் பெற்றிருந்தனர் ...
>
> பொய் மற்றும் ஏமாற்று என்று அர்த்தப்படும் to Cretize என்பதற்கு kretizein என்ற ஒரு வினைச் சொல்லை கிரேக்கர்கள், உண்டாக்கு மளவுக்கு கிரேத்தர்கள் மிகவும் கெட்ட பெயரெடுத்தவர்களாய் இருந்தனர்; ...[3]

பிரச்சனையானது சபையைச் சூழ்ந்திருந்த உலகிற்கு அப்பாலும் சென்றது: சபையானது தன்னிலேயே தீய செல்வாக்குகளின் இணை வொன்றினால் பாதிக்கப்பட்டிருந்தது. மெரில் C. டென்னே அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> கிரேத்தாவில் இருந்த கலகமானது கிரேத்தர்களின் இயல்பான விருப்பங்களிலிருந்து எழுந்த ஒழுக்க ரீதியில் வழுவிச் செல்லுதலின்

> தொகுப்பினால் காரணப்படுத்தப்பட்டு (1:12, 13), தேவ பக்தியற்ற வர்களாய் (1:16) அடங்காதவர்களாய் (1:10) தகாதவைகளை உபதேசிக்கிறவர்களாய் (1:11) மற்றும் இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாய் (1:11) இருந்த யூதர்களின் குழு (1:10) ஒன்றினால் மேம்படுத்தப்பட்ட யூதக் கதைகள் மற்றும் கட்டளைகளின் மீதான விவாதத்தினால் முக்கியத்துவப்படுத்தப்பட்டது. இந்த போதகர்கள் கலாத்தியர்களிடத்தில் கலகம் ஏற்படுத்தியவர்களிலிருந்து மாறு பட்டிருந்தனர், ஏனெனில் ஒழுக்க ரீதியில் முரண்பாடு என்பது இவர்களின் தவறாயிருந்தது, கலாத்தியர்களிடத்திலோ கடுமையான சட்டக் கோட்பாட்டில் தவறு காணப்பட்டது. இவ்விரண்டுமே இந்த நிருபத்தினால் கண்டனம் செய்யப்படுகின்றன.[4]

விக்டர் E. ஹோவன் அவர்கள், தீத்து 1:10-14 வசனப் பகுதியானது, "அவர்களின் (தீய) ஒழுக்கமும் நடக்கையும் கிரேக்கப் புராணவியலாளர் களால் உறுதிப்படுத்தப்பட்டதாகவும் பவுலினால் ஒத்துக் கொள்ளப்பட்ட தாகவும் இருந்தது. 15, 16ல் அவர்களின் இருதயம் மற்றும் மனச்சாட்சியின் நிலை கொடுக்கப்பட்டுள்ளது. மத். 15:19, 20ஐக் காணுங்கள். ஊழியத்திற்கு என்ன ஒரு களம்!"[5] என்று கவனித்துள்ளார்.

அந்தத் தீவில் சபை உண்மையில் எவ்வாறு தொடக்கம் பெற்றது என்பது அறியப்படாததாக உள்ளது. H. C. தீயெஸ்ஸன் அவர்கள், கிரேத்தர் களுக்குக் கிறிஸ்தவம் அறிமுகப்படுத்தப்பட்டதன் சாத்தியக் கூறுள்ள ஆதார மூலமாக அப். 2:11(பெந்தெகொஸ்தே நாள்)ஐக் குறிப்பிட்டார். மேலும், பவுல் ரோமாபுரிக்குச் செல்லும் வழியில் இந்தத் தீவில் சற்றுத் தாமதித்திருந்தார் (அப். 27:7-13, 21).[6]

மக்களின் தொடக்கம் எப்படியிருப்பினும், அவர்களின் தேவைகள், ஏவுதல் பெற்ற பின்னல் வேலையான பவுலின் நிருபத்தில் அவரால் பின்னப் பட்ட திறவுகோல் வார்த்தைகள் மற்றும் கருத்துக்கள் ஆகியவற்றால் தெளிவாக்கப்பட்டிருப்பதாகக் காணப்படுகின்றது. தேவைகளையும் தீர்வுகளையும் ஒப்பிட்டு, சூழ்நிலை மற்றும் இந்த நிருபம் ஆகியவற்றிற் கிடையில் உள்ள பின்வரும் முரண்களைக் கவனியுங்கள்.

ஒழுக்க ரீதியான மற்றும் ஆவிக்குரிய வகையிலான கலகங்களுக்கு பவுல் ஒரு மிக உன்னதமான மற்றும் போதுமான இரட்சகரை முன் வைக்கின்றார் (1:3, 4; 2:10, 11, 13; 3:4, 6). இழந்து போகப்பட்டுள்ள எந்த சமூகத்திற்கும் இதன் மூலமாக நம்பிக்கை என்ற விஷயம், அளிக்கப்படுகின்றது.

"அடங்காதவர்களும், வீண் பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர் களுமான" (1:10) பலருக்கு, பவுல் ஆரோக்கியமான உபதேசம் என்ற நல்மருந்தை, முறிவு மருந்தாக ஆலோசனை அளிக்கின்றார் (1:9; 13; 2:1, 2, 10). அந்த ஆரோக்கியமான உபதேசமானது, "தங்கள் சொந்த விஷயத்தைச் செய்தல்" என்பதன் சமூகப் பண்பிற்கு மேலாய் எழுந்து சுய கட்டுப்பாடு என்ற நிலைப்பாட்டில் நிற்கின்ற மக்கள் என்ற "தெளிந்த புத்தியுள்ள" ஆத்துமாக்களினால் (1:8; 2:5, 6, 12) கையாளப்பட வேண்டியது அவசிய மாயுள்ளது. இந்த சுய கட்டுப்பாடானது, மனிதர்கள் "தேவபக்தியுடமை" என்ற ஓட்டத்திற்குள் வருமுன்பே தன்னில் தானே வெளிப்படுத்தப்

*படுகின்றது (1:1; 2:12; 1 தீமோ. 2:2, 10; 3:16; 4:7, 8; 6:3, 5, 6, 11; 2 தீமோ. 3:5).*

ஆரோக்கியமான உபதேசமானது நன்கு பெற்றுக் கொள்ளப்படும் பொழுது, அது ஆத்துமாக்களை "பெரு வயிற்றுச் சோம்பேறிகளாய்" *(1:12)* இருப்பதிலிருந்து புறம்பே வழிநடத்தி "நற்கிரியைகளைச் செய்யப் பக்தி வைராக்கியமுள்ளவர்களாய்" *(2:14; 1:16; 2:3, 7; 3:1, 8, 14ஐக் காணவும்)* ஆகும்படி வழிநடத்துகின்றது.

வீண் பேச்சு, சுயமேன்மை, கட்டளை கொடுத்தல், வாக்குவாதம், போராட்டம், (பெரும்பாலும்) யூதத்துவக்காரர்கள் *(1:9-11, 14; 2:8; 3:2, 9, 10)* என்பவற்றின் உச்சமுனையான நிலைப்பாட்டுக்கெதிராகப் பவுல் முன்னெச்சரிக்கை செய்தார். வைராக்கியம் என்பது "கீழ்ப்படிதல்" என்பதன் அடிப்படையில் கட்டி எழுப்பப்பட வேண்டியிருந்ததென்று அவர் போதித்தார் *(2:5, 9; 3:1).*

சுருக்கமாக, கிரேத்தாத் தீவின் பொல்லாத மக்கள் *(1:12)* நல்லவர்களாகும்படியும் நல்லவற்றைச் செய்யும்படியும் இந்த நிருபத்தின் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டனர் *(1:16; 2:3, 7, 10, 13, 14; 3:1, 8, 14).*

மற்றும், மக்களின் தேவைகள் தெய்வீக உபதேசத்தினால் அறைகூவல் விடுக்கப்பட்டு இயக்கப்பட்டன. வால்ட்டர் டன்னெட் அவர்கள் இந்த நிருபத்தின் உபதேசக் கருத்துக்கள் பற்றிய (பின்வரும்) நல்லதொரு தொகுப்புரையைக் கொடுத்தார்:

*1. தேவனுடைய உபதேசம்.* அவர் நித்தியமானவராய் இருக்கிறார் *(1:3)*, அவர் கிருபையும் சமாதானமும் கொடுக்கிறார் *(1:4)*, அவர் தம்மையே வெளிப்படுத்தியிருக்கிறார் *(2:11)* மற்றும் நமது இரட்சகராய் இருக்கிறார் *(3:4)*. பவுல் அவருடைய அடிமை ஊழியராய் இருந்தார் *(1:1)*. (பெருமையான மக்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவது அவசியமாய் உள்ளது.)

*2. கிறிஸ்துவின் உபதேசம்.* அவர் நமது இரட்சகராய் இருக்கிறார் *(1:4; 2:13; 3:6)*. ஒரே வகையான இயற்பெயர் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். *2:13*ல் உள்ள கூற்றானது கிறிஸ்துவின் தெய்வீகத்துவத்திற்குச் சாட்சி என்ற வகையில் விசேஷமாய்க் குறிப்பிடத் தக்கதாக உள்ளது.[7] (மாம்சத்தில் தெய்வீகத்துவம் என்பது மனிதன் உபதேசத்தை அலங்கரிக்கும்படி ஏற்றுக் கொள்ள ஒரு நியமத்தை வடிவமைக்கின்றது; *3:10.*)

*3. பரிசுத்த ஆவியானவரின் உபதேசம்.* இவர் மறுபிறப்பின் முகவராய் இருக்கின்றார் *(3:5)*. (இரக்கத்தின் செய்தியானது வீழ்ந்து போன மனிதனுக்கு மறுபிறப்பு அளிக்கின்றது.)

*4. தேவனுடைய வார்த்தையின் உபதேசம்.* பிரசங்கிக்கப்பட்ட செய்தியில் (Gk.: *kerygma*) தேவன் தமது வார்த்தையை வெளிப்படுத்தியுள்ளார், இது வாழ்விற்கு நியமமாய் இருக்க வேண்டியதாயுள்ளது *(1:3; 2:5, 10)*. இது *1:9*ல் "உண்மையாய்" என்று அழைக்கப்படுகின்றது. தேவனுடைய வசனத்தின் தக்க வகையிலான போதனையின் மீது வலியுறுத்தம் உள்ளதைக் கவனியுங்கள் *(1:9; 2:1, 7)*. இதனுடன் தொடர்புடைய வகையில், தேவனுக்கெதிரான கூற்றுக்கு, (உறுதியாகவே இது யூதர்களின்

தேவ நம்பிக்கையற்ற வகையிலான போதனையாகவே உள்ளது) எதிராக எச்சரிக்கை உள்ளது (1:10, 14; 3:9). (தெய்வீகக் கட்டளைகள் தேவனுக் கெதிரான மனிதரின் கூற்றுக்களுக்கு பலத்த வகையில் நேர்மாறானவை களாய் முன்னிறுத்தப்பட்டுள்ளன.)

5. (உள்ளூர்) சபையின் உபதேசம். அப்போஸ்தலர் அதிகாரத்துடன் எழுதினார் (1:1, 3), மற்றும் தீத்துவும் அதிகாரத்துடன் பேசி, புத்தி கூறி மற்றும் கண்டனம் செய்ய வேண்டியதாய் இருந்தது (2:15). மூப்பர் களுக்கான தகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன (1:6-8), அவர்களின் கடமைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன (1:9). விசுவாசிகளின் பொறுப்புகள் 2:1-3:2ல் புறக்குறிப்பிடப்பட்டுள்ளன.[8] (மனித மேம்பாட்டிற்கான தெய்வீக வழிகாட்டுதல்கள் கேட்கப்பட்டு கடைப்பிடிக்கப்பட வேண்டும்.)

இந்த உபதேச ஆய்வானது, தீத்துவுக்குப் பவுலின் நிருபத்தில் உள்ள நடைமுறை இயல்பை முக்கியத்துவப்படுத்தி, ஒரு சபைக்குழுமமானது எத்தகைய சமுதாய அமைப்பில் வாழ்ந்தாலும் அதன் வாழ்வு மோசம் போக்கப்பட்டு விடாதபடி தெய்வீக ஆணைகளினால் தெய்வீகத்துவத்தை யும் மனிதத்துவத்தையும் அழகுமிக்க வகையில் ஒன்று கலக்கின்றது. இப்படிப்பட்ட சாத்தியக் கூறானது தேவனுடைய மக்களை எந்த ஒரு சமுதாயக் காட்சியிலும் சுத்தமானவர்களாய் இருக்கும்படியும் ஒரு நியமத்தை ஏற்புடுத்தும்படியும் தூண்ட வேண்டும்.

## தேதி

வேதாகமப் பதிவிலிருந்து, நடபடிகளில் பதிவு செய்யப்பட்டபடி பவுல் ரோமாபுரியில் தமது முதல் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்பது தெளிவாக உள்ளது (அப். 28:16-31; பிலி. 2:24; 4:22ஐக் காணவும்). அவர் விடுவிக்கப்பட்ட காலத்திற்கு சற்று முன்னதாக அவர் தீமோத்தே யுவை பிலிப்பி நகருக்கு அனுப்பலாம் என்று நம்பிக்கை கொண்டிருந்தார் (பிலி. 2:19-23). பவுல் விடுவிக்கப்பட்ட பொழுது (தாம் திட்டமிட்டிருந்த படியே; பிலே. 1, 10, 22ஐக் காணவும்) ஆசியா மைனர் பகுதிக்குச் சென்றார், வழியில் கிரேத்தாத் தீவில் சற்றுத் தாமதித்தார். அங்கு பவுல் தீத்துவை விட்டு வந்தார் (1:5). திட்டமிட்டபடி பவுல் ஒநேசிமுவைப் பற்றி பிலேமோனிடம் (பேசி) விஷயங்களை அமைவு பெறச் செய்வதற்காக கொலோசெ நகருக்குச் சென்றார். இந்தக் கால கட்டத்தில் ஒரு குறிப்பிட்ட வேளையின் போது, தீமோத்தேயு பிலிப்பியிலிருந்து புறப்பட்டு வந்து எபேசு அல்லது மிலேத்து நகரில் பவுலைச் சந்தித்தார். பவுல் மக்கெதோனியாவுக்குச் செல்லுகையில் தீமோத்தேயுவை எபேசுவில் இருக்கும்படி கேட்டுக் கொண்டார் (1 தீமோ. 1:3). மக்கெதோனியாவில் ஏதோ ஓரிடத்திலிருந்து எபேசு பகுதிக்குத் திரும்பி வரலாம் என்று பவுல் நம்பிக்கை கொண்டிருந்தார், ஆனால் தாம் தாமதிக்கலாம் என்று அவர் அறிந்திருந்தார் (1 தீமோ. 3:14, 15). அந்த வேளையில் அவர் 1 தீமோத்தேயு மற்றும் தீத்து ஆகிய இரு நிருபங்களையும் எழுதினார். அவர் ஐநோனியன் கடலின் கிழக்குக் கரையில் எப்பிரஸின்

நிக்கொப்போலி நகரில் தீத்து வந்து தம்முடன் இணைந்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டிருந்ததால், அவருடைய பயணத் திட்டங்கள் மாற்றம் அடைந்தன. "அவர் இன்னமும் நிக்கொப்போலி நகருக்கு வந்து சேர்ந்திருக்கவில்லை (3:12). அங்கு ('இங்கு' இல்லை) அவர் மழைக்காலத்தில் தங்கியிருக்கலாம் என்று முடிவு செய்திருந்தபடியால் அவர் அநேகமாக/ பெரும்பாலும் பின் கோடைக்காலம் அல்லது முன் பனிக்காலத்தில் இதை எழுதியிருப்பார்."[9] வில்லியம் ஹென்ரிக்ஸென் அவர்கள், "கி.பி. 63 என்ற தேதியானது மிகவும் தூரமாயிருக்க முடியாது"[10] என்று கவனித்துள்ளார். "கி.பி. 64ல் நீரோவின் துன்புறுத்துதல் தொடக்கம் பெற்ற காலத்தில் பவுல் ரோமச் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பார் என்பது ஏற்புடைய தாயிருப்பதில்லை."[11]

## பெற்றுக் கொள்பவர்

இந்த நிருபத்தைப் பெற்றுக் கொண்ட பிரசங்கியாரான தீத்துவைப் பற்றி நாம் அறிவது என்ன? லூயிஸ் C. ஃபோஸ்டர் அவர்கள், "தீத்துவின் பெற்றோர்கள் பற்றியும் சொந்த நாடு பற்றியும் அறியப்படவில்லை. இருப்பினும், அவர் ஒரு புறஜாதியாராய் இருந்தார் என்பது தெளிவாக்கப் பட்டது; மற்றும் அவர், பவுல் கிறிஸ்தவராகி பதினான்கு அல்லது பதினேழு ஆண்டுகளுக்குப் பிறகு சீரியாவின் அந்தியோகியாவில் இருந்தார். (கலா. 1:18; 2:1ஐக் காணவும்.) இந்த வேளையிலிருந்து அவர் (தீத்து) பவுலுடன் ஒரு நெருங்கிய துணைவராய் இருந்து, அப்போஸ்தலரால் மிகவும் உயர்வாக மதிக்கப்பட்டு முக்கியமான பணிப்பொறுப்புகள் ஒப்புவிக்கப் பட்டவராய் இருந்தார்."[12]

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் தீத்துவின் பெயர் காணப்படுவதில்லை, ஆனால் புதிய ஏற்பாட்டின் மற்ற இடங்களில் இது பதிமூன்று முறைகள் காணப்படுகின்றது: கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் இரண்டு முறைகள் (2:1; 2:3), 2 தீமோத்தேயுவில் ஒரு முறை (4:10), தீத்துவில் ஒரு முறை (1:4) மற்றும் 2 கொரிந்தியரில் ஒன்பது முறைகள் (2:13; 7:6, 13, 14; 8:6, 16, 23; மற்றும் 12:18ல் இரு முறைகள்). நடபடிகளின் புத்தகத்தில் இவரது பெயர் குறிப்பிடப்படாதிருப்பினும், தீத்துவைப் பற்றிய மறைமுகமான குறிப்பொன்று அங்கு குறிப்பிடப்படுகின்றது: அப். 15:2("அவர்களைச் சேர்ந்த வேறு சிலரும்")ஐ கலாத்தியர் 2:1, 3 ("நான் தீத்துவைக் கூட்டிக் கொண்டு ... என்னுடனே கூட இருந்த தீத்து") உடன் ஒப்பிடுவதினால் நாம், பவுல் மற்றும் பர்னபா ஆகியோரின் முதல் சுவிசேஷப் பயணத்திற்குப் பின் தீத்து பவுலுடன் இருந்தார் என்று அறிகின்றோம். புறஜாதி கிறிஸ்தவர்களுக்கு விருத்தசேதனம் செய்வித்தல் பற்றிய கேள்விக்கு முடிவு ஒன்றைப் பெறுவதில் சபையின் உதவியைப் பெறுவதற்காக அவர்கள் எருசலேமுக்கு அனுப்பப்பட்ட பொழுது "வேறு சிலரும்" அவர்களுடன் துணையாகச் சென்றனர், அவர்களில் தீத்துவும் இருந்தார்.[13] இவ்விதமாகத் தீத்து விருத்தசேதனம் பற்றிய கேள்வியின் தொடர்பாக "எடுத்துக்காட்டு-அ"[14] வாக இருந்தார், கிறிஸ்துவுக்குள்

*உண்டான சுவிசேஷச் சுயாதீனம் இழக்கப்படாதபடிக்கு பவுல் இவர் மூலமாக ஒரு நிலைப்பாட்டை மேற்கொண்டார் (அப். 15:1-29; கலா. 2:3-5ஐக் காணவும்).*

*கொரிந்துவில் கலகப் படுத்தப்பட்ட சபைக்கு தீத்து ஒரு விசேஷித்த தூதாளராக இருந்து (2 கொரி. 2:13; 7:5-14; 12:17, 18ஐக் காணவும்), பவுலுக்கு ஆறுதலின் வார்த்தைகளைத் திரும்பக் கொண்டு வந்தார். தீத்துவால் தரப்பட்ட எந்த அறிக்கையையும் நம்பிக்கைக்குரியதாகப் பவுல் கண்டார் என்பது தெளிவு. தீத்துவின் மீதான மற்ற நம்பிக்கையும் தெளிவாய் உள்ளது, ஏனெனில் எருசலேமில் இருந்த ஏழைகளுக்கு நிதி சேகரிக்க உதவும்படி அவர் தேர்ந்து கொள்ளப்பட்டார் (2 கொரி. 8:6-24).*

*"நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்கு படுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள்தோறும் மூப்பர்களை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தா தீவிலே விட்டுவந்தேனே" (1:5) என்ற வசனத்தின்படி தீத்துவைப் பவுல் கிரேத்தா தீவிலே விட்டு வந்திருந்தார்.[15] பிற்பாடு, தீத்து நிக்கொப்போலியிலிருக்கும்படி விரும்பப் பட்டார், பவுலின் இரண்டாம் சிறையிருப்பின்போது ரோமாபுரியில் அவர் (தீத்து) இருந்தார், தல்மாத்தியாவுக்கு அனுப்பப்பட்டார் (3:12; 2 தீமோ. 4:10).*

*இந்தப் பணி ஒப்படைப்புகள் யாவையும் "சபைப் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தல்" போன்ற இவ்வித கடினமான கடமைகளுக்குப் பவுல் சார்ந்திருக்க முடிந்த ஒரு நபராகத் தீத்துவை அடையாளப்படுத்துகின்றன. அவர் பணம் மற்றும் உணர்வுகள் ஆகியவற்றில் நம்பப்படத் தக்கவரா யிருந்தார். அவர் மனிதர்களைச் சீர்படுத்துபவராக, ஒருங்கமைப்பவராக, ஓரிடத்தில் விட்டுச் செல்லப்படும்பொழுது கைமேல் உள்ள பணியைச் செய்யத் தாமாகவே தொடங்குபவராக இருந்தார். தீத்து அமைத்து வைத்த மாபெரும் உதாரணத்திலிருந்து எந்த ஒரு சுவிசேஷ ஊழியரும் இந்த இடத்தில் நிதானித்திருக்கவும் பின்வரும் நான்கு மடங்கு பரீட்சைக்குத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுக்கவும் திறம்படச் செயலாற்றுவார்:*

*1. விமர்சனத்தை நீங்கள் எந்த அளவுக்கு நன்றாய்க் கையாள முடியும்? (கலா. 2:3-5; அப். 15:1-29)*

*2. பிறர் செய்துள்ள அல்லது செய்து கொண்டுள்ள பணியைக் குறித்து நீங்கள் மிகச் சரியான, நம்பத் தகுந்த அறிக்கையைக் கொடுக்க முடியுமா (கொடுப்பீர்களா)?*

*3. ஒவ்வொரு நகரிலும் மூப்பர்களை நியமிக்கும் அளவுக்கு (குறைவாய்) எஞ்சியுள்ள யாவற்றையும் நீங்கள் ஒழுங்கு படுத்த முடியுமா (1:5)? பல சபைக்குழுமங்களில் கர்த்தருடைய ஊழியமானது நிறுவன அமைப்பளவில் நிறைவடையாததாக விடப்பட்டுள்ளது.*

*4. நிதிகள் மற்றும் பொருளாதாரங்கள் ஆகியவற்றைக் கையாள்வதில் நீங்கள் நம்பத் தகுந்தவர்களாய் இருக்கின்றீர்களா (2 கொரி. 8:6, 16-21, 23, 24)? சுவிசேஷ ஊழியர்கள் தீத்து அமைத்துள்ள நியமத்தின் மாதிரியா யிருக்கத் தவறியதால் சபைக்குழுமத்தின் வாழ்விலும் வளர்ச்சியிலும் செய்யப்பட்டுள்ள சேதத்தைக் கர்த்தர் மட்டுமே அறிவார்.*

பவுல் தீத்துவுக்குக் கொடுத்த இப்படிப்பட்ட பொறுப்புள்ள பணிகளின் கண்ணோக்கில், பவுல் தீத்துவை "பொதுவான விசுவாசத்தின் படி உத்தம குமாரன்" (தீத்து 1:1) என்று குறிப்பிட்டதில் வியப்பெதுவும் இருப்பதில்லை. பல வகைகளில் பவுலும் தீத்துவும் "ஒரே ஆவியை உடையவர்களாய்" நடந்தனர் (2 கொரி. 12:18ஐக் காணவும்). கிறிஸ்துவினிமித்தமும் அவருடைய மக்களினிமித்தமும் தீத்துவின் இருதயத்தில் (2 கொரி. 8:16, 17) தேவன் "ஜாக்கிரதையை"[16] வைத்ததாகப் பவுல் உறுதிப்படுத்தினார். ஊக்கம் மற்றும் கடினமான சூழ்நிலைகளுக்கான ஞானம் ஆகியவற்றுடன் கலக்கப் பட்ட இந்த ஜாக்கிரதையுள்ள ஆவியானது தீத்துவைப் பவுலுடனும் கர்த்தருடனும் பணியாற்றும் விலைமதிப்பற்ற ஒரு உடன் ஊழியராக்கிற்று.

"நீங்களும் சென்று அந்தப்படியே செய்யுங்கள்!" என்ற கண்ணோட்டத்துடன் தீத்துவின் வாழ்வையும் ஊழியத்தையும் ஜாக்கிரதையாய்ப் படிக்கும் சுவிசேஷ ஊழியர் எவரும் நன்கு செயல்படுவார்.

இந்த நிருபம் ஏன் எழுதப்பட்டது, யாருக்காக எழுதப்பட்டது, யாருக்கு எழுதப்பட்டது என்பதை அறிந்துள்ள நாம் இப்பொழுது வசனப் பகுதிக்குள் சென்று என்ன எழுதப்பட்டது என்பதைக் கவனமாய்ப் படிப்போம்.

தீத்துவுக்குப் பவுல் எழுதுகையில், அவர் (பவுல்) சில விளக்கங்கள் தேவைப்படுகிற மக்கள் பலர், பல இடங்கள் மற்றும் கருத்துக்களைக் குறிப்பிட்டார். நாம் இப்புத்தகத்தைப் படிக்கு முன் இவற்றில் சிலவற்றை ஆராய்வோம்.

## தீத்துவில் மக்கள்

### அப்பொல்லோ

*"நியாயசாஸ்திரியாகிய சேனாவுக்கும் அப்பொல்லோவுக்கும் ஒரு குறைவுமில்லாதபடிக்கு அவர்களை ஜாக்கிரதையாய் விசாரித்து வழிவிட்டனுப்பு" (3:13).*

இந்த மனிதருக்கும், அப். 18 மற்றும் 19ன் சாதுரியவானான அலெக்சந்திரிய நகரின் யூத போதகருக்கும் இடையில் வித்தியாசம் எதுவும் ஏற்படுத்தப்படாதபடியால், இந்த அப்பொல்லோ அதே மனிதராயிருக்கலாம் என்று நாம் யூகிக்கின்றோம். இவர் அப். 18:24; 19:1; 1 கொரி. 1:12; 3:4-6; 3:22; 4:6; 16:12 ஆகிய வசனங்களிலும் குறிப்பிடப்படுகின்றார்.

### அர்த்தெமா

*"நான் அர்த்தெமாவையாவது தீகிக்குவையாவது உன்னிடத்தில் அனுப்பும்போது, நீ நிக்கொப்போலிக்கு என்னிடத்தில் வர ஜாக்கிரதைப்படு; மாரிகாலத்திலே அங்கே தங்கும்படி தீர்மானித்திருக்கிறேன்" (3:12).*

பவுலின் இந்தத் துணையாளர் பற்றி இந்த ஒரே ஒரு குறிப்பிடுதல் மட்டுமே உள்ளதால், நாம் இவரைப் பற்றி வேறு வகையில் அறிவதில்லை.

## தீத்து

*"... பொதுவான விசுவாசத்தின்படி உத்தம குமாரனாகிய தீத்துவுக்கு எழுதுகிறதாவது: பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக" (1:1, 2).*

பவுலுடன் பதினைந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் நம்பிக்கைக்குரிய உடன் ஊழியராய் இருந்த தீத்து ஒரு நண்பராக, உயர்வாக மதிக்கப்பட்டவராக இருந்தார். அவரது பெயர், நடபடிகள் புத்தகத்தில் காணப்படுவதில்லை, இருப்பினும் அப். 15:2ல் "வேறு சிலர்" என்று குறிப்பிடப்படும் இடத்தில் தீத்து குறிப்பிடப்பட்டார் என்று கலா. 2:3 உறுதிப்படுத்துகிறது. யூதர்களுக்கும் புறஜாதியார்களுக்கும் இடையிலான ஐக்கியத்தின் மீதான எருசலேம் மாநாட்டின் போது யூதத்துவ வாதிகளால் (பவுலிடம்) தீத்து விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்ட பொழுது பவுல் அதைச் செய்விப்பதற்கு மறுத்து விட்டார். இது கலா. 2:3ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

தீத்து ஒரு புறஜாதியாராயிருந்தார். ஆபிரகாமுடனான விருத்தசேதன உடன்படிக்கையானது (ஆதி. 17) புறஜாதியாருக்கு யூதத்துவ விருத்த சேதனம் செய்வித்தலைக் கேட்டுக் கொண்டிருக்க முடிந்திராது, ஏனெனில் அது எபிரெயர்களுடன் எபிரெயர்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டது. கிறிஸ்தவ/கிறிஸ்துவின் சுவிசேஷமானது எவரொருவருக்கும் விருத்த சேதனம் செய்விக்கும்படி கேட்டுக் கொள்வதில்லை. ஆகையால், இப்படிப் பட்ட ஒரு சடங்காச்சாரத்திற்குக் கீழ்ப்படியும்படி தீத்துவை எவரொரு வரும் கேட்டுக் கொள்வதற்கு உறுதிப்பாடுகள் எதுவும் இல்லாதிருந்தன. இது சட்டப்பூர்வமான வாதத்திற்கு எதிரான முக்கியமான சாட்சியாயிற்று.

தீத்து, பிலிப்பி, தெசலோனிக்கே, பெரேயா, கிரேத்தா மற்றும் தல்மாத்தியா ஆகிய இடங்களில் இருந்த சபைகளுடன்/சபைகளில் ஊழியம் செய்திருந்தார். இவர் வேதாகமத்தில் மொத்தம் பதிமூன்று முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளார் - 2 கொரிந்தியரில் எட்டு முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளார், அங்கு அவர் யூதேயாவின் பரிசுத்தவான்களில் ஏழைகளுக்காக நிவாரண நிதி சேகரிப்பதில் உதவினார் என்பது தெளிவாக உள்ளது. பவுல் 2 கொரிந்தியர் நிருபத்தை எழுதுமுன்பு, கொரிந்துவில் இருந்த சூழ்நிலையை அறிவதற்காக தீத்துவைச் சந்திப்பதற்கு எபேசுவிலிருந்து மெக்கதோனியாவுக்குப் பயணப்பட்டார்.

## தீகிக்கு

*"நான் அர்த்தெமாவையாவது தீகிக்குவையாவது உன்னிடத்தில் அனுப்பும் போது நீ நிக்கொப்போலிக்கு என்னிடத்தில் வர ஜாக்கிரதைப் படு; மாரிக்காலத்திலே அங்கே தங்கும்படி தீர்மானித்திருக்கிறேன்" (3:12).*

சிறிய ஆசியாவிலிருந்து வந்த கிறிஸ்தவரான தீகிக்கு, கிரேக்கத்திலிருந்து எருசலேமுக்குப் பவுலுடன் துணையாளராக வந்தார், இவர் எபேசு, கொலோசே பட்டணங்களுக்கும் பிலேமோனுக்கும் நிருபங்களைக்

கொடுக்கும்படி பவுலினால் அனுப்பப்பட்டார். இவரே கொலோசெயர்களுக்குப் போதித்தார் மற்றும் கொலோசெயில் பின்னாளில் ஏற்பட்ட தேவனை மறுக்கும் விஷயம் ஒன்றைக் கையாள்வதில் பவுலின் உதவியை நாடினார் என்பவை உறுதியானவைகளாகும். வேத வசனங்களில் இவர் ஐந்து முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளார் *(அப். 20:4; எபே. 6:21; கொலோ. 4:7; 2 தீமோ. 4:12; தீத்து 3:12).*

### சேனா

*"நியாயசாஸ்திரியாகிய சேனாவுக்கும் அப்பொல்லோவுக்கும் ஒரு குறைவுமில்லாதபடிக்கு அவர்களை ஜாக்கிரதையாய் விசாரித்து வழிவிட்டனுப்பு" (3:13).*

இந்த நியாயசாஸ்திரி (அநேகமாக இவர் யூதத்துவப் பிரமாணத்தில் வல்லுநராய் இருந்திருக்கலாம்) அறியப்படாத ஒரு இடத்திற்கு அப்பொல்லோவுடன் பயணப்பட்டிருந்தார். அவர்கள் தீத்துவுக்கு எழுதப்பட்ட இந்த நிருபத்தை கொண்டு சென்றிருக்க சாத்தியக் கூறு உள்ளது. இவர்கள் கிரேத்தாவைக் கடந்து செல்லுகையில் இவர்களின் பயணத்திற்குத் தேவையானவற்றைக் கொடுத்து உதவும்படி பவுல் தீத்துவிடத்தில் வேண்டிக் கேட்டுக் கொண்டார்.

## தீத்துவுக்கு எழுதிய நிருபத்தில் (உள்ள) இடங்கள்

### கிரேத்தா

*"நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்கு படுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தாதீவிலே விட்டுவந்தேன்" (1:5).*

கிரேத்தாவானது மத்திய தரை(க்கடல்) பகுதியில் நான்காவது பெரிய தீவாக உள்ளது. இது மிகப் பழமையான மற்றும் மிகவும் மேம்பட்ட நாகரீகங்கள் ஒன்றின் இருப்பிடமாயிருந்தது. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலங்களில், அங்கு வாழ்வானது விழுந்து போகும் அளவுக்குக் கீழ் நிலையில் இருந்தது (1:12). இந்தப் புறதெய்வ மார்க்க உலகில் இளம் சபையானது எதிர்கொண்டிருந்த விஷயங்களை "ஒழுங்கு படுத்தும்படிக்கு" தீத்து ஊழியம் செய்ய வேண்டியிருந்தது.

### நிக்கொப்போலி

*"நான் அர்த்தெமாவையாவது தீகிக்குவையாவது உன்னிடத்தில் அனுப்பும் போது நீ நிக்கொப்போலிக்கு என்னிடத்தில் வர ஜாக்கிரதைப்படு; மாரி காலத்திலே அங்கே தங்கும்படி தீர்மானித்திருக்கிறேன்" (3:12).*

இந்த "வெற்றியின் நகரமானது" கிரேக்கத்தின் வட மேற்குக் கடற்கரையில் அமைக்கப்பட்டிருந்தது, இங்கு அநேகமாக கி.பி. 65 - சாத்தியக்

*கூறுள்ள வகையில் கி.பி. 66ன் மாரிக்காலத்தைச் செலவிடப் பவுல் தீர்மானித்திருந்தார். தீத்து கிரேத்தாவில் தம் ஊழியத்தை நிறைவேற்றிய பிறகு அங்கு (நிக்கொப்போலிக்கு) வரும்படி கேட்டுக் கொள்வதற்கு அவர் எழுதினார். இது திட்டவட்டமாய் அறியப்பட்டுள்ளபடி பவுல் செல்ல நோக்கங் கொண்டிருந்த கடைசி இடமாய் இருப்பதால், அவர் இரண்டாம் முறை கைதானது அங்கு நடந்தது என்று சிலரால் யூகிக்கப்படுகிறது.*

## தீத்துவுக்கு எழுதிய நிருபத்தின் முக்கியமான கருத்து

### போதித்தல்

*"போதித்தல்" என்ற வார்த்தையை (இந்நிருபத்தில்) பவுல் அடிக்கடி பயன்படுத்துமளவுக்கு, எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் தகுதியான/ ஏற்புடைய தகவலைத் தருதல் என்பது அவரது சிந்தையில் மிகவும் முக்கியமானதாயிருந்தது. ''போதித்தல்'' என்ற வார்த்தையின் கருத் தொற்றுமை வார்த்தைகளாக இந்நிருபத்தில் "பேசுதல்"/மற்றும் "ஊக்கப் படுத்துதல்" என்ற வார்த்தைகள்பயன்படுத்தப்படுகின்றன.*

---

*குறிப்புகள்*

[1]Albert M. Wells, Jr., *Inspiring Quotations* (Nashville: Thomas Nelson Publishers, 1988), 59. [2]C. Michael Moss, *The College Press NIV Commentary, 1, 2 Timothy & Titus* (Joplin, Mo.: College Press Publishing Co., 1994), 11-12. [3]William Barclay, *The Letters to Timothy, Titus and Philemon,* The Daily Study Bible Series, rev. ed. (Philadelphia: Westminster Press, 1960), 277. [4]Merrill C. Tenney, *New Testament Survey* (London: Inter-Varsity Fellowship, 1964), 336. [5]Victory E. Hoven, *The New Testament Epistles* (Grand Rapids, Mich.: Baker Book House, 1959), 98. [6]H. C. Theissen, *Introduction to the New Testament* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1955), 264. [7]*இவ்வசனப் பகுதி பற்றிய மேன்மையான குறிப்புரை ஒன்று* Bruse Metzger's "The Jehovah's Witness and Jesus Christ" in *Theology Today,* April, 1953 *என்ற பாடத்தில் தரப்பட்டுள்ளது.* [8]Walter Dunnett, *An Outline of New Testament Survey* (Chicago: Moody Press, 1960), 129-31. [9]Ronald A. Ward, *Commentary on 1 and 2 Timothy & Titus* (Waco., Tex.: Word Books Publishers, 1974), 227. [10]William Hendriksen, *A Commentary on the Epistles to Timothy and Titus* (London: The Banner of Truth Trust, 1957), 39.

[11]*பவுலின் கடைசிப் பயணங்கள், தீத்து நிருபம் எழுதப்பட்ட நாள் ஆகியவற்றின் முழுமையான பாடத்தை "1, 2 தீமோத்தேயு & தீத்து" பாட வரிசையில் காணவும்.* [12]Don DeWelt, *Paul's Letters to Timothy and Titus* (Joplin, Mo.: College Press, 1961), 20. [13]Hendriksen, 37. [14]Dunnett, 128. [15]*தீமோத்தேயுவின் கூச்ச சுபாவம் மற்றும் தீத்துவின் பலத்த இயல்பு என்ற வகையில் இந்தக் கூற்றுகள் சிலரால் ஓரளவுக்கு ஒப்பாகக் கருதப்படுகின்றன* (Dunnett, 126; *தீயிஸ்ஸென்* 263, 266; Tenney, 334-37). *முதலாவது, பவுல் இப்படிப்பட்ட ஒப்பிடுதல்களைப் பரிந்துரைக்கவில்லை (2 கொரி. 10:12, 13ஐக் காணவும்). இரண்டாவது, பவுல் கிரேத்தாவில் தீத்துவின் பணி*

ஒப்படைப்பு குறித்து அவருக்கு "கட்டளை" இடவும், "சகல அதிகாரத்துடனும் கடிந்து கொள். ஒருவனும் உன்னை அசட்டை பண்ண இடங்கொடாதிருப்பாயாக" (தீத்து 1:5; 2:15) என்று வலியுறுத்தவும் வேண்டியிருந்தபடியால், தீத்துவுக்குள் ஒரு தயக்கம் இருந்ததை ஒருவர் காண முடியும். இவ்விரண்டில் இரண்டாம் வகைப் பணி ஒப்படைப்பை எதிர்கொள்ளுகிற சுவிசேஷ ஊழியர் எவரும் - பவுல் கொடுத்த புத்திமதிகளின் வகையைப் போலவே - ஒருபுறம் மாபெரும் பலமும் இன்னொரு புறம் மாபெரும் சுயகட்டுப்பாடும் தேவைப்படுபவராய் இருப்பார். அவர்களின் நபர்த்தன்மைகளில் உள்ள வேறுபாடுகளைக் கண்டு பிடிப்பதல்ல ஆனால் இதே வகையான சூழ்நிலைகளை எதிர்கொள்ளுகையில் நமது சொந்த நபர்த் தன்மைகளைப் பகிர்ந்து கொள்ளுவதே நமது தேவையாக உள்ளது.

[16]ஜாக்கிரதையான அக்கறை (Gk.: *spoude*) - "... துரிதப்படுத்துதல் ... ஜாக்கிரதையுடமை, ஊக்கம் ... ஏதொன்றிற்காகவும் முயற்சியுடன் உழைத்தல் ... ஒருவர் மிகவும் ஜாக்கிரதையுடன் தம்மில் ஆர்வம் கொள்ளுதல், யூதா 3 ... 2 பேது. 1:5 ... 2 கொரி. 8:16" (C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament*, trans. and rev. Joseph H. Thayer, [Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint ed., Grand Rapids. Mich.: Baker Book House, 1977], 585).

---

# *தீத்துவுக்கு எழுதிய நிருபத்தின் வரைக்குறிப்பு*

## *எட் சேன்டர்ஸ்*

*அதிகாரம் 1*

I. *பரிசுத்த(மாய்) வாழுதல் மற்றும் நற்செயல்கள் ஆகியவற்றுக்காக சபையை ஒழுங்கமைத்தல்.*
   - அ. *ஒவ்வொரு சபைக்குழுமத்திலும் தகுதியுள்ள மூப்பர்கள் (1:5-9; அப். 14:23ஐக் காணவும்).*
   - ஆ. *பரிசுத்தமற்ற வகையில் வாழுதல் அல்லது போதித்தலை மூப்பர்களும் தீத்துவும் கடிந்து கொள்ள வேண்டும் (1:10-2:1).*

*அதிகாரம் 2*

II. *பரிசுத்த(மாய்) வாழுதல் மற்றும் நற்செயல்கள் ஆகியவற்றுக்காகக் குடும்பத்தை ஒழுங்கமைத்தல்*
   - அ. *முதிர் வயதுள்ள ஆண்கள் (2:2)*
   - ஆ. *முதிர் வயதுள்ள பெண்கள் (2:3)*
   - இ. *இளம் பெண்கள் (2:4, 5)*
   - ஈ. *இளம் ஆண்கள் (2:6-8)*
   - உ. *அடிமைகள் (2:9, 10)*
   - ஊ. *தேவனுடைய கிருபையினிமித்தம் இதைச் செய்யுங்கள் (2:11-15)*

*அதிகாரம் 3*

III. *பரிசுத்த(மாய்) வாழுதல் மற்றும் நற்செயல்கள் ஆகியவற்றுக்காகத் தனிநபரை ஒழுங்கமைத்தல்.*

அ. ஆள்பவர்களைப் பொறுத்தமட்டில் *(3:1)*
ஆ. அயலகத்தவர்களைப் பொறுத்தமட்டில் *(3:2)*
இ. நம்மீது தேவனுடைய அன்பு மற்றும் கிருபையினிமித்தம் இதைச் செய்யுங்கள் *(3:3-7)*
ஈ. பயனற்ற வாக்குவாதங்களை விட்டு விலகுங்கள் *(3:9)*
உ. மோசமான மனிதர்களும் நல்ல மனிதர்களும் *(3:10-15)*

---

## தீத்துவுக்கு எழுதிய நிருபத்தில் தலைப்புகளுடன் *முக்கியமான வசனங்கள்*

| | | |
|---|---|---|
| *அதிகாரம் 1:* | *2* | நித்திய ஜீவன் |
| | *5-9* | மூப்பர்கள் |
| | *15* | தூய்மை |
| *அதிகாரம் 2:* | *1* | ஆரோக்கியமான உபதேசம் |
| | *8* | ஆரோக்கியமான பேச்சு |
| | *11-14* | கிருபையும் இரட்சிப்பும் |
| *அதிகாரம் 3:* | *1* | ஆள்பவர்கள் |
| | *5, 7* | இரட்சிப்பு |
| | *6* | நீதிமானாக்கப்படுதல் |